முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 15 திகதி முதல்
சோபகிருது வருடம் மார்கழி மாதம் 22 திகதி வரை
(31.12.2023 ஞாயிறு முதல் 07.01.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. நீதிகாக்க உயிர்தியாகம் செய்த
   நிகழ்வு கொண்ட இந்தியா தமிழகமே
   விதி என்று கருதா முனைப்போடு
   வீரம்பல கண்ட இந்தியா தமிழகமே
2. இந்தியா தமிழகம் தன்னில்
   இயம்பிட சோபகிருது சிலைதிங்களில்
   சிந்தைபட மூவைதிகதி மேல் இருபானீர் திகதி வரை
   செப்பிடுவேன் நடக்கும் வார நிகழ்வாக
3. ஆகவே வருங்கால பலன் குறித்து
   அரங்கன் கேட்க வார ஆசிதனை
   அகத்திய மகரிஷி யானும் உரைப்பேன்
   ஆற்றல் மிக்க ஞானபூமியும்
4. ஞானபூமியும் கலியின் கொடுமையாக
   நம்பகத் தன்மையை மக்களிடம்
   தானாக இழக்கும் வடிவாக
   தலைமையும் ஆளுமை வகையான
5. வகையான உபத்தலைமைகளும்
   வல்லமையான சிற்றரசர்களும்
   மிகையான ஊழல் வஞ்சமுற்று
   முறைகேடு செய்து நீதியின் பிடியில்

6. நீதியின் பிடியில் அகப்பட நேரும்
நிலம் மண் கனிம அபகரிப்பென
சதிபல சகல துறைகளிலும் செய்து
சாமானியரும் அறிய வெளிப்பட நேரும்
7. நேருமை தவறா வாழ இனி
நிலவுலகில் சிந்தனை மாற்றம்
வருங்காலம் அதிகார ஆளுமை
வகைபட உணரும் வண்ணம்
8. வண்ணமுடன் நீதியின் கடுமை
வழிகாட்டலாக அமையக்கூடும்
இன்னும் தவறை உணர்ந்து
ஏற்பு கொண்டு திருந்தாவிடில்
9. திருந்தாவிடில் இந்திய தமிழக
தலைமைகட்கு வரும் தேர்தல்களம்
வருந்தவே பின்னடைவாக மாறி
வருங்காலம் புதுமை கண்டிட நேரும்
10. நேருமை காட்டும் தருமவழியில்
ஞானிகள் காட்டும் உண்மை வழியில்
வருகவே இந்தியா தமிழகமும்
வளர்ச்சி நிலையை அடைய நேரும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் **31.12.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **22ம்** நாள் **07.01.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

நீதியை காப்பதற்காக தங்களது உயிரையும் தியாகம் செய்து நீதியை நிலைநாட்டிய தியாகிகளை கொண்ட இந்தியா தமிழகமே எதையும் விதியே என்று மனம் தளராமல் முனைப்பாக செயல்பட்டு வீரத்துடன் போராடி வெற்றி கண்ட இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் மார்கழி மாதம் **15ம்** நாள் **31.12.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **22ம்** நாள் **07.01.2024** ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை அவதார ஞானி

ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கேட்க அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஆற்றல் மிக்க ஞானபூமியாக விளங்கிய இந்திய தேசமும் தற்சமயம் கலியின் கொடுமைக்கு உள்ளாகி மக்களிடம் ஆட்சியர்கள் நம்பிக்கையை இழக்கும் விதத்திலே தலைமை பொறுப்பு வகிப்போரும் துணையாக உள்ளோரும், அவர்களுக்கு கீழ் உள்ளவர்களும் என சிலர் நீதிக்கு புறம்பாக நடந்து ஊழல் புரிந்தும் வஞ்சனையான செயல்களையும் செய்து வர நீதியின் பிடியிலே அவர்கள் செய்த தீமையான செயல்கள் எல்லாம் வெளிப்பட்டு அகப்பட நேருமப்பா.

நிலத்தின் வகையிலும், மண் வகையிலும், கனிம வளங்களை தவறான முறையில் எடுத்து ஊழல் புரிந்தும் வருவதுடன் சகல துறைகளிலும் ஒரு சிலர் ஊழல் செய்து வந்தது எல்லாம் இனி வரும் காலம் பொதுமக்கள் அறியும் படியாக உலகினில் வெளிப்பட நேருமப்பா.

அவரெல்லாம் திருந்திடவும், மற்றவர்களும் நேருமை தவறாமல் வாழ்ந்திடவும் அவர்களது சிந்தனையில் மாற்றம் உண்டாகும் வகையிலேயும் அதிகாரத்தில் உள்ளோரும் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்களும் உணரும் வகையிலே நீதியானது கடுமையுடன் நடந்து வழிகாட்டலாக இனி அமையுமப்பா.

ஆதலினாலே நடக்கும் நீதியின் செயல்பாடுகளை கண்டேனும் அதை உணர்ந்து ஏற்று திருந்தினால் நலமே திருந்தாமல் பாவ புண்ணியங்களிலே நம்பிக்கை இன்றியும் நீதியில் நம்பிக்கை இல்லாமலும் ஒரு சிலர் தொடர்ந்து நீதிக்கு புறம்பாக செயல்பட்டால் வரும் தேர்தல் களத்திலே அவர்கள் மனம் வருந்தும்படி தோல்வியையோ பின்னடைவோ அடைய நேருமப்பா. புதியவர்கள் உள்நுழைய வாய்ப்பாக அமைந்துவிடுமப்பா.

நேர்மையும் தருமமும் உபதேசிக்கும் தர்ம வழியிலே ஞானிகள் காட்டும் உண்மை நெறியிலே அவர்கள் வந்திட்டால் இந்தியா தமிழகம் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–